## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (26.09.2015 முதல் 30.09.2015)

**அறிக்கை எண் 75/2015** **தேதி: 25.09.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 47°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 23°செ முதல் 29°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 19°செ முதல் 23°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (26.09.2015 முதல் 30.09.2015)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 85-92 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 80-88 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ முதல் 12 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு மற்றும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 26.09.15 | 8 | 35 | 23 | 6 | 85 | 80 | 10 | தெற்கு |
| 27.09.15 | 23 | 33 | 22 | 7 | 88 | 85 | 12 | தென்மேற்கு |
| 28.09.15 | 29 | 33 | 22 | 7 | 90 | 86 | 12 | தென்மேற்கு |
| 29.09.15 | 20 | 33 | 22 | 7 | 91 | 87 | 12 | தென்மேற்கு |
| 30.09.1 | 20 | 33 | 22 | 7 | 92 | 88 | 12 | தென்மேற்கு |

| 5 | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு நல்ல மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ தற்போது நடவு செய்துள்ள சம்பா நெற்பயிருக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும்.
- ✓ மானாவாரியில் தானியங்கள், பருத்தி மற்றும் பருப்பு வகைகளை விதைக்கலாம். விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் 10 கிராம்/கிலோ, அதை தொடர்ந்து அசோஸ்பைரில்லம் 250 கிராம் /ஏக்கர் என்ற விகிதத்தில் விதை நேர்த்திசெய்து விதைக்கவும்.
- ✓ மானாவாரி விதைப்பில் 20 அடி இடைவெளியில் சரிவுக்கு குறுக்காக குறு வரப்பு அமைத்து வடிந்தோடும் நீரின் வேகத்தைக் குறைக்கவும்.
- ✓ விதைப்பிற்கு முன் 10-20 விதைகளை சிறு தொட்டியில் ஈர மண்ணில் விதைத்து விதை முளைப்புத்திறனை பரிசோதிக்கவும்.
- ✓ இறவையில் நடப்பட்டுள்ள குளிர் கால கம்போடியா பருத்தி மற்றும் மஞ்சளுக்கு தகுந்த வடிகால் வசதி செய்யவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ மானாவாரியில் தானியங்கள், பருத்தி மற்றும் பருப்பு வகைகளை விதைக்கலாம். விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் 10 கிராம்/கிலோ, அதை தொடர்ந்து அசோஸ்பைரில்லம் 250 கிராம் /ஏக்கர் என்ற விகிதத்தில் விதை நேர்த்திசெய்து விதைக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.